# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

09.09.2024

## 37. 'தெய்வ பிரசன்னமே' ஆதி சபைகளின் அடையாளமாயிருந்தது!

ஆதி கிறிஸ்தவர்களிடமிருந்த ஓர் விசேஷித்த அடையாளமாய் இருந்ததெல்லாம், அவர்கள் உள்ளான ஜீவியத்தில் ஒளி சுடர்விட்ட "தெய்வீக பிரகாசமே"யாகும்! அவர்களின் இருதயங்களில் சூரியனே (உலகத்தின் ஒளியே) வந்து உதித்து 'வெளிச்சத்தையும் வெப்பத்தையும்' தந்தபடியால், தெய்வ பிரசன்னத்திற்கு வேறு யாதொரு மூலதனங்களும் அவசியமில்லா திருந்தது! சபையாய் கூடிவந்த அந்த கிறிஸ்தவர்களிடம் காணப்பட்ட "உள்ளான ஒளியின் சாட்சியே" போதுமானதாயிருந்தது. ஆனால், இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளை சற்று ஏறிட்டுப் பாருங்கள். "கிறிஸ்துவின் ஜீவ ஒளி" அங்கு இல்லை என்பது கண்கூடாகத் தோன்றவில்லையா?

'ஏதோ அனுபவம் உள்ளது' என்பதற்கும் 'எங்கள் நடுவில் ஒருவர் இருக்கிறார்' என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? ஆதி கிறிஸ்தவ சபைகளில் கூடி வந்தவர்கள் "தங்களோடு வாசம் செய்த தெய்வத்தின் அதிசயத்தையே" நிறைவாய் பெற்றிருந்தார்கள்.

– ரத்னம்